# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை</u>

முன்னிலை :- திரு.M. ரவிச்சந்திரன், பிஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பட்டுக்கோட்டை

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு2054-ஸ்ரீசுபகிருது வருடம் பங்குனித் திங்கள் 15 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 2/2023**

**இன்**

**அசல் வழக்கு எண் 26/2022**

1. சின்னதம்பி
2. ராமச்சந்திரன்

மன்னங்காடு கிராம பிரதிநிதித்துவ முறையில் ... **மனுதாரர்கள்/ வாதிகள்**

/ எதிர்/

1. வைத்திலிங்கம்
2. மாரிமுத்து
3. ராஜேந்திரன்
4. சின்னக்கண்ணு
5. செந்தில்
6. சாமிநாதன்
7. அண்ணாத்துரை
8. குமார்
9. மோகன்
10. நாகரெத்தினம் ... **எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்**

இம்மனு 14.03.2023-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆர். கோவிந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 மற்றும் 6,9 ம் எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 4 மற்றும் 6,9 ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. என். பாலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும்

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:00:15 +0200

என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன் படி மனுவில் கண்டவாறு பிராதை திருத்தம் செய்ய மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்: -**

மனுதாரர் 1ம் வாதி என்றும், வாதியும், 2ம் வாதியும் மன்னங்காடு கிராம பிரதிநிதித்துவ முறையில் வழக்கு சொத்தை பொறுத்து செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கு தாவா தொடர்ந்துள்ளார்கள் என்றும், பட்டுக்கோட்டை தாலுக்கா, மன்னங்காடு கிராமம் புல எண் 55.2A2 ல் 0.53.5 ஏர்ஸ் நிலம் மனுதாரருக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என்றும், மேற்படி சொத்துக்கு வடபுரம் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றும், மேற்படி ரோட்டில் வடபுரம் மழைநீர் வடிந்து செல்வதற்காக கான் உள்ளது என்றும், அதேபோல் புல எண். 63.2A1 மற்றும் 63/8 ல் வடபுரம் பூஸ்தியில் ரோடு உள்ளது என்றும், மேற்படி ரோட்டிற்கு வடபுரம் 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு சொந்தமான வீடு உள்ளது என்றும், மேற்படி ரோட்டில் வடபுரத்தில் மழைநீர் வடிந்து செல்வதற்காக கான் உள்ளது என்றும், மேற்படி கான் வழியாக மழைநீர் வடிந்து மேற்படி சொத்திற்கு கிழக்கே உள்ள மெயின் ரோட்டில் மேல்புரத்தில் உள்ள கானில் சென்று விழுகிறது என்றும், மேற்படி புல எண். 63.2A1 மற்றும் 63/8 ல் வடபுரத்தில் உள்ள கானை மறித்து எதிர்வாதிகள் கடந்த 2020 ஆகஸ்ட் மாதத்தில் தூர்த்து விட்டதால் மேற்படி கான் வழியாக மழைநீர் வழிந்தோட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மன்னங்காடு ஊராட்சி தலைவராக முதல் எதிர்வாதியும், மன்னங்காடு ஊராட்சி உறுப்பினராக 5ம் எதிர்வாதியும் உள்ளார்கள் என்றும், எதிர்வாதிகள் செயலால் மழைநீர் வடிய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்திற்கு மேற்கே உள்ள இடங்கள் அனைத்தும் குளம் போல் பெருகி

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:00:33 +0200

மழையினால் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும், வாதிகளான மனுதாரர்களின் இடமும் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும், மேற்படி இடத்தை வெட்டி எதிர்வாதிகள் பாழ்படுத்திவிட்டார்கள் என்றும், மேற்படி ரோடும் கானும் ஊராட்சி மன்ற பராமரிப்பில் இருந்ததால் ஊராட்சி தலைவரான 1ம் எதிர்வாதியை நேரில் சந்தித்து மேற்படி கானை துார் எடுத்துவிடும்படி மனுதாரர்கள் கேட்டும், 1ம் எதிர்வாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்வாதிகள் செயலால் மன்னங்காடு கிராம பொதுமக்களுக்கு இடைஞ்சலும், இன்னலும் ஏற்பட்டுள்ளது என்றும், ஊராட்சி சாலை புல வரைபடத்தில் கோடிட்டு காணப்பட்டுள்ளது என்றும், மன்னங்காடு கிராமம் புல எண். 63.2A1 மற்றும் 63/8 ல் உள்ள ரோட்டின் வடபுரத்தில் உள்ள கானை எதிர்வாதிகள் அடைத்து வைத்துள்ளதை மழைநீர் வடிய ஏதுவாக எடுத்துவிடும்படி 1ம் எதிர்வாதிக்கு மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் 23.01.2021ம் தேதியில் நோட்டீஸ் கொடுத்தார்கள் என்றும், மேற்படி நோட்டீஸை 27.01.2021ம் தேதியில் பெற்றுக்கொண்ட 1ம் எதிர்வாதி மழைநீர் செல்வதற்கு கான் எடுத்துவிடவில்லை, எவ்வித பதிலும் கொடுக்கவில்லை என்றும், எதிர்வாதிகள் ஒன்றுசேர்ந்து மழைநீர் வடிந்து செல்லும் கானை தடுத்துவிட்டதால் மன்னங்காடு கிராம பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், எனவே புல எண் 63.2A1 மற்றும் 63 /8 ல் உள்ள கானை துார்வாரி எடுத்து மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக கானை எடுத்துவிடும்படி மனுதாரர்கள், எதிர்வாதிகள் பேரில் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங் கோரி உள்ளார்கள் என்றும், சொத்துவிபரத்தில் நாங்கெல்லையில் 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு தெற்கு என்பதற்கு பதிலாக 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு வடக்கு என்றும், ரோட்டுக்கு வடக்கு என்பதற்கு பதிலாக 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு வடக்கு என்றும், வடிகால் கானுக்கு தெற்கு என்றும் நாங்கெல்லை தவறாக சொல்லப்பட்டு விட்டது என்ற விபரம் இன்று தான் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்படி நாங்கெல்லையை திருத்தாவிட்டால் ஏராள கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே மனுதாரரின் மனுவை

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:00:49 +0200

அனுமதிக்க வேண்டுமென கோரியுள்ளார்கள்

**3. 2,3 4 மற்றும் 6,9 ம் எதிர்மனுதாரர்கள்/ 2,3 4 மற்றும் 6,9 ம்எதிர்வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர் உரையின் சுருக்கம் : -**

மனுதாரரின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கப்பட வேண்டிய ஒன்று என்றும், இதில் இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மறுப்பதால் அதனை இந்த நம்பர் மனுதாரரே கண்டிப்பாய் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், மனுதாரரின் மனு அபிடவிட்டில் 2 முதல் 5 பாராக்களில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், இவ்வழக்கு வாதி தரப்பில் 1ம் வாதியால் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டு 1ம் வாதியை குறுக்கு விசாரணை செய்ய இருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு வழக்கு சொத்து பற்றிய முழு விபரம் தெரியாத நிலையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்போது சொத்து விபரத்தை திருத்தம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அத்துடன் வழக்கு விசாரணைக்கு பிறகு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலையும், கஷ்ட, நஷ்டத்தையும் ஏற்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு மனுப்படி எவ்வித பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்கள்.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:01:02 +0200

4. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
" மனுதாரர்கள் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்".

**6. தீர்வு: -**

இருதரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்கள் /வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து பிரதிவாதிகள் கட்சியாடி வந்துள்ள நிலையில் மேற்படி அசல் வழக்கானது சாட்சிகள் விசாரணைக்காக பட்டியலில் இடப்பட்டு, வாதி தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1யை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், வழக்குரை சொத்துவிபரத்தில் நாங்கெல்லையில் 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு தெற்கு என்பதற்கு பதிலாக 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு வடக்கு என்றும், ரோட்டுக்கு வடக்கு என்பதற்கு பதிலாக 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு வடக்கு என்றும், வடிகால் காணுக்கு தெற்கு என்றும் நாங்கெல்லை தவறாக சொல்லப்பட்டு விட்டது விபரம் மனுதாரருக்கு தற்பொழுதுதான் தெரிய வந்ததால் அதுகுறித்து வழக்குரையை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்ய வேண்டுமென மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தாவா சொத்தானது வடிகால் காணை தூர்வாரி செப்பனிட்டு வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்கக்கோரி

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:01:27 +0200

பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் வழக்குரையை தாக்கல் செய்யும்பொழுது சொத்து விபரத்தில் நான்கெல்லைகளை தவறுதலாக போடப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட தவறை திருத்தம் செய்யாமல் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றும், மேற்கண்ட நான்கெல்லையை வழக்கு விசாரணை தொடங்கிய பிறகு திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்வதால் வழக்கிற்கான வழக்கு மூலமோ, பரிகார தன்மையோ மாறக்கூடியதில்லை என்றும், வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று தனது வாதுரைக்கு ஆதரவாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்க்கண்ட முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

I. 2013 (5) CTC 872

**IN THE HIGH COURT OF MADRAS**

**B. Rajendran, J.**

**C.R.P. No. 3479 of 2013 & M.P. NO. 1 of 2013**

**24.09.2013**

**J. Shivakumar, Chairman, Navrang Shipping Pvt. Ltd., and others.**

**/Vs/**

**P.N.T. Chandru, Managing Director, Navrang Shipping Pvt. Ltd., and others.**

**Code of Civil Procedure, 1908 (5 fo 1908, Order 6, R17 – Application for Amendment of typographical error – Held, said typographical error not a wilful omission to drag on proceedings – Allowing of Application by Trial Court with costs, justified. An application was filed to amend the affidavit and change the suit number in the affidavit and petition. Said Application was allowed by Trial Court by imposing costs.**

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:02:01 +0200

**II. 2004(1) TLNJ Page No.435**

**Madras High Court**

**G. Mary Suseela ..Petitioner**

**/Vs/**

**Micheal and another ..Respondents**

**Civil Proceedings Code 1998 as amended O.6.R.17 – Suit originally filed for declaration and injunction of "A" Schedule property and for recovery of possession "B" Schedule property - amendment of plaint seeking the relief of recovery of possession of "A" Schedule property which was allegedly taken forcible possession by the respondent after the advocate commissioners' inspection and also to correct the survey no – Petition dismissed by trial court – held erroneous and amendment can be allowed if relief claimed becomes in appropriate due to change of circumstances.**

மேற்கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பில் வழக்குரை சொத்து விபரத்தில் நான்கெல்லைகள் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதையும், தவறுதலாக போடப்பட்டுள்ள புல எண்ணையும் திருத்தம் செய்யலாம் என தீர்வு கண்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தாலும், மேற்கண்ட முன்தீர்ப்புகளின்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்யக்கோருவது நீதியின்பால் ஏற்கத்தக்கது என்றும், இதனால் வழக்கின் தன்மை மாறப்போவதில்லை என்பதாலும், வழக்குரையில் திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், நீதியின் நலன் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

M
RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:02:24 +0200

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:02:36 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

**<u>இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2023.03.29 19:02:46 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி

பட்டுக்கோட்டை.